# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 86/2016 நாள்.09.10.2025

PW1- திரு. ஆறுமுகம் த/பெ. திரு. வேலாயுதம்

1ஆம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கிரையம் வாங்கிய சொத்தை ஏலத்திற்குகொண்டு வந்துவிட்டதால் நான் பணம் கட்டி எடுத்தேன் அந்த பணம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். வழக்கு தாக்கல் செய்ய விபரம் சொன்னது நானா என்றால் ஆமாம். கே. என். ஷேக் முகமதுவிடம் இடத்தை வாங்கினேனா என்றால் ஆமாம். கே.என் ஷேக் முகமது என்பவர் 1ஆம் பிரதிவாதியின் வாங்கி கொடுக்கும் ஏஜென்ட் என்றால் ஆமாம். இந்திய உணவு கழகத்திற்கும் ஷேக் முகமதத்திற்கும் மேற்படி ஏஜென்ட் என்பதில் பணம் கொடுக்கவேண்டியது இருந்தது என்றால் ஆமாம். அந்த பணத்தை வசூலிக்க 23/1973 என்ற அசல் வழக்கை தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் தெரியாது. 1ஆம் பிரதிவாதிக்கும் ஷேக் முகதிற்கும் உள்ள ஒப்பந்தத்திற்கு ஆதரவாக ஷேக் முகமது அவருடைய சொத்தை கொடுத்திருந்தார் என்றால் ஆமாம். அந்த வழக்கு உணவு கழகத்திற்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் ஆமாம். இந்திய உணவு கழகம் தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் அ,.வ.எண் 23/1973 ஏற்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு சென்னை உயர்நீதிமன்றத்தில் AS 1299/1986 தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம். ஷேக் முகம்மது மட்டுமல்லாமல் 10 ஆம் பிரதிவாதி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனியிடமிருந்தும் வசூலித்து கொள்ளலாம் என்று உத்தரவானது என்றால் ஆமாம். ஷேக்முகம்மதும், 10 ஆம் பிரதிவாதியும், கூட்டாகவும் தனிதனியாகவும் அந்த தொகை செலுத்த பொறுப்பு என்று உத்தரவானது என்றால் ஆமாம். பணத்தை வசூலிக்க EP.89/1990 என்ற நிறைவேற்று மனுவை இந்திய உணவு கழகம் தாக்கல் செய்தது என்றால் சரிதான். நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும்போது ஷேக் முகம்மது இறந்துவிட்டதால் அவருடைய வாரிசு நிறைவேற்றுமனுவில் சேர்க்கபட்டார்கள் என்றால் சரிதான். இந்திய உணவு கழகத்திற்கு ஷேக் முகம்மதுவால் பெந்தகமாக கொடுக்கபட்ட சொத்து மேற்படி நிறைவேற்று மனுவில் ஏலத்திற்கு வந்தது என்றால்

சரிதான். 24.8.2005 இல் ஏலத்திற்கு வந்த சொத்தில் ஒரு பகுதியை நான் கிரையத்திற்கு வாங்கினேன் என்றால் சரிதான். ஏலத்தில் கோதண்டராமன் என்பவர் அந்த சொத்தை விலைக்கு எடுத்து கொள்ள இருந்தபோது நான் ஏலத்திற்கு வந்த சொத்தில் பகுதி சொத்தை விலைக்கு வாங்கியுள்ளதால் அந்த சொத்தை காப்பாற்றுவதற்காக நிறைவேற்றுமனுவில் கண்ட தொகையை செலுத்திவிட அனுமதி கோரி EA 84/2012 இடைநிலை மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அனுமதி கிடைத்து பணம் ரூ.9,53,757 கட்டினேன் என்றால் சரிதான். ஏலம் எடுத்தவருக்கு கொடுக்கவேண்டிய 5% bidding price தொகையையும் சேர்த்து செலுத்தினேன் என்றால் சரிதான். ஷேக்முகம்மதுக்கும், நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனிக்கும் இடையே ஏற்பட்ட இன்சூரன்ஸ் ஒப்பந்தம் ரூ.1,50,000த்திற்குதான் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி EA 84/2012இல் நான் பணம் கட்டியதால் நான் கிரையம் பெற்ற சொத்தை ஏலத்திலிருந்து மீட்கபட்டு என்னிடம் வந்துவிட்டது என்றால் சரிதான். இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து இந்திய உணவு கழகம் பணத்தை வாங்காமல் ஷேக்முகம்மதுவின் சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து அதன் காரணமாக நான் அந்த ஏலத்தொகையை கட்டியதால் எனக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். யாரிடமிருந்து பணம் கேட்கிறேன் என்றால் இந்திய உணவு கழகத்திடமிருந்து கேட்கிறேன். வழக்கு தாக்கல் செய்தபோது ஷேக்முகம்மதுவின் வாரிசுகளான 2 முதல் 8 பிரதிவாதிகள் மற்றும் 10 ஆம் பிரதிவாதியான நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனியும் வழக்கில் கண்ட தொகையை எனக்கு கொடுக்கவேண்டும் என்ற பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு அது ஞாபகமில்லை. 1 முதல் 10 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து ரூ.10,16,919/- அது தவிர 2 முதல் 8 பிரதிவாதிகள் ரூ.4,47,263/- கொடுக்கவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ரூ.5,91,232/- ஷேக் முகம்மதுவிற்கும், 10 ஆம் பிரதிவாதி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி இடையே ஏற்பட்ட காப்பீடு ஒப்பந்த தொகையான ரூ 1,50,000 அதற்குண்டான வட்டியுடன் சேர்த்து ரூ.10,16,919/- கேட்டேன் என்றால் சரிதான். எனக்கும் நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனிக்கும் இடையே எந்த ஒப்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். எனக்கும் இந்திய உணவு கழகத்திற்கும் இடையே எந்த ஒப்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். நான் வாங்கிய சொத்து

சம்மந்தமாக எந்த நஷ்டம் ஏற்பட்டாலும் அதை சரி செய்யவேண்டியது 2 முதல் 8 பிரதிவாதிகள்தான் என்றால் சரியல்ல. கிரையத்தில் வாங்கிய சொத்து பெந்தகத்தில் இருந்ததை மறைத்துவிட்டதாக ஷேக் முகம்மது மற்றும் அவரது வாரிசுகளைதான் சொல்லமுடியும் என்றால் சரியல்ல. இந்திய உணவு கழகம் ஷேக் முகம்மதுவிடமிருந்து வரவேண்டிய தொகைக்கு என் மீது எந்த வழக்கும் போடவில்லை என்றால் சரிதான். பெந்தகமாக வைத்த சொத்தை ஏலத்திற்கு கொண்டுவந்தபோது நானாகதான் பணத்தை மனுதாக்கல் செய்து கட்டினேன் என்றால் சரிதான். மேற்படி நிறைவேற்று மனுவில் நான் இடைநிலை மனு தாக்கல் செய்து உள்ளே வராமல் இருந்திருந்தால் கோதண்டராமன் ஏலத்திற்கு எடுத்திருப்பார் என்றால் சரிதான். சொத்து ஏலத்திற்கு வராமல் தடுப்பதற்கு அந்த சொத்து என்னுடைய சொத்து என்று மேற்படி நிறைவேற்று மனுவில் பாத்தியதாரர் மனு கொடுத்திருக்கவேண்டும் என்றால் நான் கொடுத்துள்ளேன். அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கேனா என்றால் செய்திருக்கிறேன். மேற்படி மனுவை நீதிமன்றம் ஏற்காததால் மேல்நடவடிக்கை சென்றேனா என்றால் இல்லை இந்த வழக்குதான் தாக்கல் செய்தேன். இந்த வழக்கு பிராதில் இந்திய உணவு கழகம் பணத்தை வசூலிக்க நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி மீது மட்டுமே நிறைவேற்று மனுவை தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும் நான் கிரையம் பெற்ற சொத்தை ஜப்தி செய்து ஏலத்திற்கு கொண்டு வந்ததால் மேற்படி நிறைவேற்று மனுவில் நான் கட்டிய பணத்தை திரும்ப தரவேண்டும் என்று கேட்டிருப்பது சரியல்ல என்று சொன்னால் தவறு. ஐகோர்ட் தீர்ப்பாணை படி இந்திய உணவு கழகம் பணத்தை வசூலிக்க நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனியிடம் மட்டுமே வழக்கு தாக்கல் செய்து பணத்தை வசூலிக்க வேண்டும் என்று நான் கூறமுடியாது என்று சொன்னால் தவறு. சொத்தை வாங்கியதால் ஏற்பட்ட நஷ்டமாக நான் கோரியுள்ள தாவா தொகையை 2 முதல் 8 பிரதிவாதிகளிடம் மட்டுமே கோர முடியும் என்றும் 1 மற்றும் 10 ஆம் பிரதிவாதிகளிடம் தாவா தொகையை கோரமுடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கபட்டது என்றும் அதனால் இந்த வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கட்டியதாக சொல்லப்படும் பணம் 10 ஆம் பிரதிவாதியான நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனிக்காக செலுத்தவில்லை என்றாலும், பணத்தை திரும்ப செலுத்தவேண்டிய 2 முதல் 8 பிரதிவாதிக்காகதான் செலுத்தினேன்

என்றால் என் சொத்தை பாதுகாப்பதற்காக கட்டினேன். ஏற்கனவே நிறைவேற்று மனுவில் நடந்த விஷயங்களை இந்த வழக்கில் அவைகளை குறை சொல்லி இந்த வழக்கை முன் நடத்தமுடியாது என்றால் சரியல்ல.இந்த வழக்கு 1 மற்றும் 10 ஆம் பிரதிவாதியை பொறுத்தவரை தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

10 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என்னுடைய சொத்தை காப்பாற்றுவதற்காக பட்டுகோட்டை சார்பு நீதிமன்ற உத்தரவின்பேரில் செலுத்தினேனா என்றால் ஆமாம். அந்த பணத்தை எடுக்க 1ஆம் பிரதிவாதி ஒரு மனுபோட்டு அதில் நான் எடுக்ககூடாது என்று கட்சி செய்து பின்பு உத்தரவின்பேரில் எடுத்து கொண்டார்கள் என்றால் ஆமாம். சார்பு நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை இந்த வழக்குதான் போட்டுள்ளேன். உயர்நீதிமன்ற உத்தரவை மறைத்து இந்த வழக்கின் 1ஆம் பிரதிவாதி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்ததாக நான் கூறியது தவறு ஏன் என்றால் அ.வ.எண் 23/1973 நாள் 9.9.1985 இல் தீர்ப்பாகி அதை மாறுதல் செய்வதற்காகதான் 1ஆம் பிரதிவாதி மேல்முறையீடு செய்தார் என்றும், அதற்கான உயர்நீதிமன்ற உத்தரவு 28..11.2002 இல் வந்தது என்றும், அதற்கு முன்பாகவே 1ஆம் பிரதிவாதி நிறைவேற்று மனுவை சரியாகதான் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. 10ஆம் பிரதிவாதிதான் பணம் செலுத்தவேண்டும் என்று வந்த உயர்நீதிமன்ற உத்தரவு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உத்தரவை செயல்படுத்தும் நிறைவேற்று மனுவை 12ஆண்டிற்குள் தாக்கல் செய்யவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனவே 10ஆம் பிரதிவாதிக்கு எதிராக நேரடியாக எந்த பரிகாரமும் கோரமுடியாது என்று சொன்னாலும், 10 ஆம் பிரதிவாதி ஏதேனும் காப்பீட்டு தொகைக்கு பொறுப்பு என்று உத்தரவு இருந்தாலும் கூட 12 ஆண்டுக்குள் நிறைவேற்று மனு தாக்கல் செய்யாததால் அது இனிமேல் 10ஆம் பிரதிவாதியை பொறுத்து கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. சொத்தை காப்பாற்றுவதற்காக நான் கட்டியுள்ள தொகையை திரும்ப பெறுவதற்காக மேல்முறையீடு செல்லாமல் புதிதாக இந்த வழக்கை சோடித்துள்ளேன் என்றால்

சரியல்ல. 10 ஆம் பிரதிவாதியை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.